★ 2ம்கட்ட தாக்குதலுக்கு படையினர் தயாராம்

[லண்டன்]

யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் 2ம் கட்ட இராணுவ நடவடிக்கைக்கு படையினர் ஆயத்த நிலையில் இருப்பதாக பி பி சி. சிங்கள சேவை தெரிவித்தது.

பி.பி.சி. மேலும் தெரிவிக்கையில்: இந்த இராணுவ நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடியும் என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

முப்படைகளின் உதவியுடன் இந்த வெற்றியை பெற முடியும் என்றும் அந்த அதி

(5ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 04 இதழ் 130
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 20 – 7 – 1995

## மேலதிக படையினர் யாழ். குடா விரைவு?

(கொழும்பு)

'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையின் அடுத்த கட்டத்திற்காக மேலும் துருப்புக்களை அனுப்ப இராணுவ வட்டாரங்கள் முடிவு செய்துள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அடுத்தகட்ட நடவடிக்கைக்காக தற்போது படையினர் தயாராகி வருகின்றனர். புதிய இடங்களுக்கு மேலும் துருப்புக்களை அனுப்புவது தொடர்பாக நிலைமையை தாங்கள்

(5ம்பக்கம் பார்க்க)

★ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவதாக

# ஐ. சி. ஆர். சி. யை நாட்டிலிருந்து உடன் வெளியேற்ற கோரிக்கை!

## பௌத்தபீடம் அரசுக்கு வற்புறுத்து!!

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ஐ. சி. ஆர். சி.) விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இயங்குவதனல் இந்த நிறுவனத்தை உடனடியாக இலங்கையிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று பௌத்த உயர்பீடம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது பற்றி பௌத்த உயர் பீடம் மேலும் தெரிவிக்கையில்:

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஒரு ஊழல் நிறைந்த நிறுவனம். இந்த நிறுவனம் அரசாங்கத்துக்கு ஆதரவாக இயங்காமல் விடுதலைப்புலிகளுக்கு தனது ஆதரவை வழங்கி வருவதனல் இந்த நிறுவனத்தை உடனடியாக இலங்கையிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளது.

நவாலியில் தேவாலயம் மீதான குண்டுவீச்சில் நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட செய்தியை சர்வதேச செஞ்சிலுவைச் சங்

(5ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் பல படைமுகாம்கள் மூடப்பட்டு வருகின்றன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் மேலும் பல இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

வாழைச்சேனை, வாகரை பகுதிகளில் முழுமையாக இராணுவ முகாம்கள் அகற்றப்பட்ட பின் மேலும் பல இராணுவ முகாம்களை மட்டக்களப்பில் இராணுவம் மூடியுள்ளது.

கரடியனறு, இலுப்பையடிச்சேனை ஆகிய இடங்களில் மட்டக்களப்பு பதுளை வீதியில் உள்ள இராணுவ முகாம்கள்

(5ம் பக்கம் பார்க்க)

## பி.பி.ஸிக்கு எதிராகவும் அரசு நடவடிக்கை எடுக்க முடிவு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் 'ஒப்பரேஷன் லீப் போவேட்டில்' படையினர் மேற்கொண்ட படுகொலைகள் பற்றி ஒளிபரப்பிய பி. பி சி. தொலைக்காட்சிக்கு எதிராகவும் அரசு கடும் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாம்.

பி. பி. சி. ஒளிபரப்பில் யாழ்ப்பாண நிலைமைகள் பற்றி வெளியிட்ட தகவல்கள் பிழையெனவும் இதற்காக பி. பி. சி நிறுவனம் மன்

(6ம் பக்கம் பார்க்க)

## ஹங்கேரியில் இறந்த தமிழரின் பெயர்கள்

(கொழும்பு)

ஜேர்மனிக்கு சட்டவிரோதமாக வாகனம் ஒன்றில் செல்லும் வழியில் ஹங்கேரியில் மூச்சுத் திணறி இறந்த இலங்கைத் தமிழர்களின் விபரம் வருமாறு:

ராஜா, சிவலோகநாதன், விநாயகமூர்த்தி, வள்ளியப்பன், ஹரிகரகுமார், செல்வராசா, ஜெயக்குமார், வாசு, ரமேஷ், தர்மராஜா. தீபன் மற்றும் ஆறு சிங்களவர்களும் உயிரிழந்தவர்களாவர். இறந்தவர்களில் இருவரின் பெயர்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இச்சம்பவத்தில் உயிர் தப்பியவர்களின் பெயர் விபரங்

(5ம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரச்னையை சாதகமாக்க தமிழக கட்சிகள் தீவிரமுயற்சி

(சென்னை)

தமிழகத்தில் அடுத்த வருடம் சட்டசபைத் தேர்தல் நடைபெறப்போவதையடுத்து தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் பல, ஈழத் தமிழருக்கு ஆதரவு தெரிவித்து போராட்டங்களை நடாத்த ஆரம்பித்துள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

பி. பி. ஸி மேலும் கூறுகையில்: ஈழத் தமிழருக்கு ஆதரவாக தொடர்ந்தும் குரலெழுப்பிவரும் ம. தி. மு. க. பொதுச் செயலர் திரு. வை. கோபாலசாமிக்கும், திரு. ப. நெடுமாறனுக்கும் தமிழகத்

(6-ம் பக்கம் பார்க்க)

முன்னள் அமைச்சர் அஸ்வர்

## மேசையில் ஏறி நின்று நாடாளுமன்றில் குழப்பம்

[கொழும்பு]

ஜனதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கு காலக்கெடு விதித்து நாடாளுமன்றில் முன்னள் அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர் தனது ஆசனத்தில் ஏறி நின்று எதிர்ப்பு போராட்டம் நடாத்தியதால் சபையில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் மேற்படி கோரிக்கையை முன்வைத்த ஜனப் அஸ்வர் தனது கதிரை, மேசையில் ஏறிநின்று ஆர்ப்பாட்டம் செய்தபோது அவ

(5-ம் பக்கம் பார்க்க)

## மட்டுநகரில் படையினர் திடீர்சூடு; மூன்று தமிழர் ஸ்தலத்திலே பலி!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு கிண்ணி என்ற இடத்தில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மூன்று தமிழ் பொதுமக்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர்.

இப்பகுதியில் ரோந்து வந்த படையினர் அங்கு நின்ற தமிழர்மீது நேற்றுக்காலை திடீரென துப்பாக்கிச்சூட்டை நடாத்தியபோதே மேற்படி மூன்று பொதுமக்களும் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர்.

இதையடுத்து அப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள், கடைகள், பாடசாலைகள் யாவும் மூடப்பட்டதுடன் மக்கள் வீடுகளினுள் முடங்கிக் கொண்டனர் கடந்த வாரமும் இப்பகுதியில் படையினர் தாக்குதல் நடாத்தியதும் குறிப்பிடத்தக்கது. சி

## கொழும்பு மேயரை கொல்ல திட்டமாம்

[கொழும்பு]

கொழும்பு மேயர் கே. கணேசலிங்கத்தை கொலை செய்ய விடுதலைப் புலிகள் கொழும்புக்குள் ஊடுருவியிருப்பதாக புலனய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் பல தாக்குதல் பிரிவுகள் அண்மையில் கொழும்பினுள் ஊடுருவியிருப்பதாகவும் இதில் ஒரு

(5ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பொம்மனேரியன் நாய்க் குட்டி விற்பனைக்கு இருக்கிறது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- ராஜன்ஸ் 69, 4-ம் குறுக்குத் தெரு, சின்னக்கடை, குருநகர். (சி-1559)

புறொய்லர் கோழிகளும், பன்றியும், பன்றிக் குட்டிகளும் விற்பனைக்குண்டு. அண்ணு பாம், இணுவில். (ஏ-5111)

### புலமைப் பரிசில்

ஆண்டு-5 புலமைப் பரிசில் தேர்வுக்கான வினாப் பத்திரம் 1, வினாப் பத்திரம் 2க்குரிய "பொது விவேகம், பொது அறிவு" வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். ஏ-5077

### தேவை

வெற்றுஜாம் (JAM) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட். 14, சீனியர் ஒழுங்கை யாழ்ப்பாணம். [ஏ-5115]

# ★ 'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கையில் 300 வீடுகள், கடைகள் சேதம் பொருட்கள் ராணுவத்தால் சூறை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு, மேற்குப் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது அப்பகுதிகளில் சுமார் 300க்கும் மேற்பட்ட வீடுகள், கடைகள், கட்டிடங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

10க்கும் மேற்பட்ட தேவாலயங்கள், கோவில்கள் சேதமடைந்துள்ளன.

ஷெல், மற்றும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் நூற்றுக்கு மேற்பட்ட கால்நடைகள் பரவலாக இறந்த போயுள்ளன.

இறந்தகால் நடைகள்யாவும் துர்நாற்றம் வீசியதைதொடர்ந்து அப்பகுதிக்குச் சென்ற மக்களால் அவை தகனம் செய்யப்பட்டன.

போதிய விறகுகள் இன்மையால் அவையாவும் பெரும்பாலும் அரைகுறையாகவே எரிந்தநிலையில் காணப்படுகின்றன.

இதேவேளை பரவலாகக் காணப்பட்ட மனித சடலத் துண்டங்களும், சடலங்கள் சிலவும் மக்களால் அந்தந்த இடங்களில் வைத்துத் தகனம்செய்யப்பட்டன.

இராணுவம் தரித்துநின்ற இடங்களில் அமைக்கப்பட்ட காவலரண்களுக்கு அப்பகுதிகளில் உள்ள பல பனைமரங்கள் தென்னைமரங்கள் தறித்து அமைக்கப்பட்டுள்ளன.

வீட்டுப் பொருள்களான வாங்கு மேசைகள் யாவும் இவற்றிற்காகப் பாவிக்கப்பட்டுள்ளதையும் மதில்கள் உடைத்துக் காவலரண்களுக்கு அடுக்கப் பட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

பொன்னாலைப் பகுதியில் இராணுவம்தரித்திருந்தவேளை அங்கே காவலரண்களுக்கு நெல், அரிசி, செத்தல்மிளகாய் மாவு மூடைகளையே அடுக்கியிருந்தனர்.

கடைகள் உடைக்கப்பட்டும், வீடுகளில் இருந்தும் இப்பொருள்கள் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டன.

இப்பகுதிகளில் மக்கள் வெளியேறிய அனைத்து வீடுகளில் இருந்தும் பெறுமதிமிக்க வீட்டுத்தளபாடங்கள், பாவனைப் பொருள்கள். உணவுப்பொருள்கள்என்பன திருடப்பட்டுள்ளன இராணுவத்தினராலேயே

(5-ம் பக்கம் பார்க்க)

# இராணுவத் தாக்குதல் விபரங்கள் உயர்மட்டத்திற்கு அறிவிப்பு

## யாழ். அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு, வடக்கு பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல் குறித்து முடிந்தளவிலான விபரங்கள் உயர்மட்டத்திற்கு அறிவிக்கப்பட்டு வருவதாக யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் தெரிவித்தார்.

உணவு விநியோகமும், அத்தியாவசியசேவைகள் தொடர்பாக உடனடியாக வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களிற்கு உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எதுவித தாமதமுமின்றி செய்யப்பட்டது.

தொடர்ந்தும் உணவுப் பொருட்களும், அத்தியாவசிய தேவைப் பொருட்களும் எமது மாவட்டத்திற்கு கொண்டுவருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்துள்ளார், 162-ரி

## இராசி பலன்

20-07-1995

வியாழககிழமை

(தமிழுக்கு ஆடி-4)

அட்டமி மு. ப. 9-46 வரை, அச்சுவினி மாலை 6-12 வரை, இராகுகாலம் பி. ப. 1-31 முதல் 3-01 வரை, சுபவேளை காலை 7-31 முதல் 9-01 வரை, அமிர்தசித்த யோகம்.

மேடம்: நன்மதிப்பு, தெய்வ சிந்தனை, காரியசித்தி.

இடபம்: பிறர் அச்சம், தலை குனிவு, குடும்ப செலவு.

மிதுனம்: மதி நுட்பம், தொழில் உறவு, சுபகாரியம்.

கடகம்: முதியவர் அறிவுரை குடும்ப சுகம், புதிய முதலீடு.

சிங்கம்: விரோதிகள் வன்மம், பணமுடை, அலைச்சல்.

கன்னி: இனசனப்பகை, எதிர்பாராததுன்பம், வேதனை

துலாம்: தொழில் லாபம், விருந்துபசாரம், கற்பனை.

விருச்சிகம்: நண்பர்கள் மகிழ்ச்சி, சுபச்செய்தி, மனத்தைரியம்.

தனுசு: மனப்பதட்டம், தொழில் கஷ்டம், வீண் வாதம்.

மகரம்: பயனற்றமுயற்சி, உடல் உபாதை. மனச்சுமை.

கும்பம்: கலந்தாலோசனை, பொதுப்பணி, மனத்தியாகம்,

மீனம்: குடும்ப விரோதம், ஒதுங்கிப்போதல், குழப்பம்.

— ஜோஸ்யர்

## மீன் விலை அதிகரிப்பு

(வட்டுக்கோட்டை)

யாழ். நகரில் தற்போது மீனின் விலை அதிகரித்துள்ளது.

மீன்பிடித் தொழிலாளர்கள் பலர் தொழிலுக்குச் செல்வதை நிறுத்தியுள்ளமையாலேயே மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை அதிகரித்துள்ளது, 139

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் இராணுவ முகாமில் இருந்து ராணுவத்தினர் நேற்று முன்தினம் காலைஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல்கள் பொன்னாலை, மூளாய் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. சேதவிபரங்கள் தெரியவில்லை.

170-ரி

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம், இராணுவ நடவடிக்கையின் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது

இன்று 20ம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவிருந்த மஹோற்சவ தினங்களில் அம்பாளுக்குவிசேட அபிடேக ஆராதனைகள் நடைபெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பொதுப் பட்டமளிப்பு விழா 1995

1995-07-29ஆம் திகதி நடைபெற இருந்த பொதுப் பட்டமளிப்பு விழா தற்போதைய சூழ்நிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது இது பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்

1995-07-17

ஏ-5109

## பாடசாலை அதிபர்களுக்கென பிரத்தியேக சேவை

(கொழும்பு)

பாடசாலை அதிபர்களுக்கென புதிதாக அதிபர் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. அதிபர்களுக்கான பிரத்தியேக சேவையாக இது இருக்கும்.

தற்பொழுது ஆசிரியர்களுக்கென ஆசிரியர் சேவையொன்று இருக்கின்றபோதிலும் அதிபர்களுக்கான சேவை எதுவும் நடைமுறையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பாடசாலை அதிபர்களுக்கு இந்தியாவில் மூன்று வாரகாலப் பயிற்சி வழங்கும் திட்டமொன்றை அரசு நடைமுறைப்படுத்தவுள்ளது.

புதுடில்லியில்இந்திய கல்வித்துறை அதிகாரிகளினால் இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது இதன் முதல்கட்டமாக இலங்கையைச்சேர்ந்த 20 அதிபர்கள் தற்பொழுது டில்லிக்கு அனுப்பப்படவுள்ளனர். இவர்களில்இருவர் தமிழர், இருவர் முஸ்லீம்களாவர். கி-சி

# தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

தமிழீழ காவல்துறையில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தமிழீழ பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடைய விண்ணப்பதாரர்கள், 1995-07-25ந் திகதி வரை தமிழீழ காவல்துறை பழைய பூங்கா அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும். ஆண்/பெண் இரு பாலாரும் விணப்பிக்கலாம்.

### 01. உப பரிசோதகர் தரம்.

| | | |
|---|---|---|
| 1. வயது | : | 18 — 35 வரை. |
| 2. கல்வித் தகைமை | : | க. பொ. த. (சாதாரண தரத்தில்) 6 பாடங்கள். தமிழ், கணிதம் / எண் கணிதம் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தி அல்லது க. பொ. த. (உயர் தரம்). |
| 3. உயரம் | : | 5' 6''. |

### 02. காவலர் தரம்.

| | | |
|---|---|---|
| 1. வயது | : | 18 — 35 வரை. |
| 2. கல்வித் தகைமை | : | க. பொ. த. (சாதாரண தரத்தில் தமிழ், கணிதம் / எண்கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி. |
| 3. உயரம் | : | 5' 6''. |

பா. நடேசன்,

பொறுப்பாளர்,

தமிழீழ காவல்துறை.

[ஏ 5116]

# பொது இடங்களில் பதுங்குகுழி அமையுங்கள்

(திருநெல்வேலி)

ஆசிரியர்கள், மாணவர்கள் தற்போதைய நாட்டு நிலைக்கேற்ப உடனடியாக வெற்றுச் சாக்குகள், உரைப்பைகள் முதலியன வற்றைச் சேகரித்து பிரதான வீதிகள், பொது இடங்களில் உடனடியாக பதுங்கு குழிகளை அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறான பதுங்கு குழிகளை அமைப்பதன் மூலம் பெருமளவு பொதுமக்களின் உயிரிழப்பை தவிர்க்கமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ தாக்குதலின் போது பெருமளவில் மக்கள் உயிரிழந்ததற்கு பதுங்குழிப் பாதுகாப்பு இன்மையே காரணம். எனவே உடனடியாக செயற்பட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

157-சி

## நவாலி தேவாலயப் பகுதியில்

# சேதமடைந்த நிலையில் ஐம்பது சைக்கிள்கள்

(யாழ்ப்பாணம்)

நவாலி சென் பீற்றேஸ் தேவாலய பகுதிக் கட்டிட இடிபாட்டுக்குள் பெருமளவு சைக்கிள்கள் சேதமடைந்த நிலையில் உள்ளன.

சுமார் 50 க்கும் மேற்பட்ட சைக்கிள்களும், ஒரு முச்சக்கர வண்டியும் சேதமடைந்த நிலையில் ஒன்றாகக் குவிக்கப்பட்டுள்ளன.

இந்த சைக்கிள்கள்இதுவரை அடையாளம் காணமுடியாத நிலையில் உள்ளன.

தேவாலயம் மீது நடைபெற்ற விமானத் தாக்குதலில் உயிரிழந்த, படுகாயம் அடைந்த பொதுமக்களின் சைக்கிள்களே இவ்வாறு பலத்த சேதமடைந்த நிலையில் அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளன. -170-இ

## மணிவாக்கு

பரந்த மனப்பான்மையும் உயர்ந்த நோக்குத்தான் சுகத்தின் சொரூபங்கள். அற்பமும் குறுகியவையுமான தன்மைகள் உள்ள இடத்தில் சுகம் தங்கவே தங்காது எனவே நாம் சான்றோர்களையே நாடி அடிபணிந்து போற்றவேண்டும். — சாந்தோக்யஉபநிஷதம்.

# நமது நோக்கு

## "யாவரும் ஒன்று திரள்வீர்"

"முன்னேக்கிப் பாய்தல்" நடவடிக்கையின் முதல் கட்டம் சிறிலங்கா அரசைப் பொறுத்தளவில் படு தோல்வியில் முடிவடைந்தது. குடாநாட்டு மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். இழப்புக்கள் இருப்பினும் இடம்பெயர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்கிறார்கள். இத்துடன் எல்லாம் முடிந்துவிட்டதா? தோல்வியை ஒப்புக்கொள்ள விரும்பாத அரசு விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்ற மாதிரி திரும்பவும் யாழ்ப்பாணம் உட்பட முழுக் குடாநாட்டையும் கைப்பற்றுவதற்கு தொடர்ந்தும் போரிடப் போவதாக அறிவித்துள்ளது. அரசு அவ்விதம் செய்யாது என்று நாம் எண்ணுவது முட்டாள்தனம்.

சிறிலங்கா அரசு எதிர்கால யுத்த நடவடிக்கைகளுக்காக நவீனரக குண்டுவீச்சு விமானங்கள், உலங்கு வானூர்திகள் வெடிப்பொருட்கள் என்பவற்றை கொள்வனவுசெய்ய நடவடிக்கை எடுத்து வருவதுடன் அதற்குத் தேவையான 1000 கோடி ரூபாவைத் திரட்டுவதற்கும் நடவடிக்கையையும் எடுத்து வருகிறது, இந்த நடவடிக்கைகள் பூர்த்தியானதும் வடபகுதியில் மழைகாலம் தொடங்குவதற்கு முன் "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கை தொடர்ந்து நடத்தப்படும் என்று கூறப்படுகிறது. விடுதலைப்புலி வீரர்கள் இராணுவத்தின் தாக்குதலை முறியடிக்கும் வல்லமைகொண்டவர்களேயானாலும் இராணுவத் தரப்பினரைவிட ஆட்பலம் குறைந்தவர்கள் என்பதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

விடுதலைப் புலிகளிடம் தமிழீழத்தை மீட்டெடுக்கும் யுத்த மூலோபாயம், மனவலு, ஆயுதபலம் எல்லாம் இருக்கின்றது. ஆனல் ஆட் பற்றுக்குறைக்கு இயந்திர மனிதர்களை உருவாக்கும் ஆற்றல் இல்லை. ஆகவே ஆட்பலத்தை கொடுக்கவேண்டியவர்கள் தமிழ் மக்களே. இக் கடமை உடனடியாக நிறைவேற்றப்படவேண்டும். எதிரியானவன் பாயமுன் நாம் பாயவேண்டும். எதிரி ஆட்பலம் கூடியவன்; ஆனலும் மனவலு இல்லாதவன்.

ஈழத் தமிழ் மக்கள்பால் தமிழகத்தில் அனுதாப அலை மிகத் தீவிரமாக எழுந்துள்ளது. பேரணிகள், உண்ணவிரதப் போராட்டங்கள் என்று பலவகையிலும் தமிழக மக்கள் அனுதாபம் தெரிவிக்கிறார்கள். இன்னெரு படி மேலேறி பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் ஈழத்தில் நடப்பது விடுதலைப் போர்; ஆகவே உலக நாடுகள் தமிழீழத்தை அங்கீகரிக்க முன்வரவேண்டுமென்று கோரியுள்ளார். வடக்குத் தமிழர்கள் காயப்பட்டு இரத்ததானம் கோரியுள்ளதால் அதை கொடுக்கத் தானும் தன் தொண்டர்களும் தயார் என்றும் கூறியுள்ளார்.

இவற்றிலிருந்து தமிழீழத்திற்கான எமதுபோராட்டம் உலகத் தமிழினத்தின் ஆசியுடனும் அனுதாபத்துடனும் இறுதிக்கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளது தெரியவருகிறது. இந்தநிலையில் நாம் எம்மிடமுள்ள சகல சக்திகளையும் இன்னொரு நாளைக்கென்று வைத்திருக்காமல் இப்போதே ஒன்று திரட்டி முன்னெடுத்து எதிரியை விரட்டியடித்து எமது மண்ணை மீட்பதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் வலிகாமம் மேற்கு. வடக்குப் பகுதிகளில் முன்னேக்கிப் பாய்தல் முதல்கட்ட நடவடிக்கையின் போது எழுபத்தைந்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பலியாகி உள்ளனர் என்பதை அவதானிக்கவேண்டும். அவர்களில் 20 பேர் க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்கள் ஆண்டு 1 முதல் 10 வரையிலானேர் 6 பேர். மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட 50க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். எதிரியானவன் தாக்கும் போது மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் என்று வேறுபடுத்திப் பார்க்கமாட்டான். அவனைப் பொறுத்தளவில் சகலரும் தமிழர்களே. தமிழர்கள் அழிக்கப்படவேண்டுமென்பதே அவனது குறிக்கோள். ஆகவே குண்டுபட்டு ஷெல்பட்டு உயிரிழப்பதிலும் பார்க்க எமது மண்ணை மீட்பதற்காக எதிர்க்கெதிராகப் போராட்டத்தில் இணைவது சாலச்சிறந்தது.

### ஹங்கேரி சம்பவத்தின் எதிரொலி

# ஐரோப்பிய நாட்டு எல்லைப்பகுதிகளில் வாகன சோதனைகள் தீவிரம்!

(லண்டன்)

ஹங்கேரியில் இழுவை 'ட்ரக்' வண்டியினுள் சட்டவிரோதமாகநாடுகடக்க முயன்ற 18 தமிழர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து ஐரோப்பிய நாடுகள்பலவும் தமது எல்லைப்பகுதிகளில் வாகன சோதனைகளை தீவிரப் படுத்தியுள்ளன.

இச்சம்பவத்தில் 21 பேர் பலியானதாக முன்னர் தெரிவிக்கப்பட்டபோதிலும் உண்மையில் 18 பேர் மட்டுமே உயிரிழந்ததாகவும், மேலும் மூவர் காணமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

இச்சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள ட்ரக் சாரதி ருமெனியாவைச் சேர்ந்தவர் என இனங்காணப்பட்டுள்ளார்.

இந்த 21 பேரில் 20 பேர் இலங்கையர், ஒருவர் ஈராக்கியர் ஐரோப்பிய நாடுகளுக்கு சட்டவிரோதமாகச் செல்வோர் பல்கேரியா, ருமேனியா நாடுகளுக்கு விமான மூலம் சட்டபூர்வமாக வந்த பின்னர் தரை மார்க்கமாக ட்றக் வண்டிகளில் ஒழிந்து எல்லைகளைக் கடந்து வருகின்றனர்.

உலோககொள்கலன்களினுள் ஆன இழுவை வண்டிகளில் ஒழிக்கவைத்து கொண்டு செல்லப்பட்ட இவர்கள் அதிக வெப்பத்தினுல் எரிகாயங்களுக்கு உள்ளானதாகவும், மூன்று நாட்கள் உணவின்றி கொள்கலன்களினுள் அவதிப்பட்ட இவர்கள் அதிக உஷ்ணம் தாங்கமுடியாது தமது ஆடைகளைக்களைந்து எறிந்ததாகவும் இச்சம்பவத்திலிருந்து தப்பியோர் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் ஒவ்வொருவரும் இந்தசட்டவிரோத பயணங்களுக்காக தரகர்களுக்கு 15 ஆயிரம் டொலர்களை வழங்கியிருந்தனர். இதைவிட 'ட்றக்' வண்டிக்கான கட்டணமாக 800 டொலர்களை செலுத்தியிருந்தனர். கி-ரி

### முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையை

# 2மேஜர்ஜெனரல்கள், 3பிரிகேடியர்கள் போன்றோர் வழிநடத்தினர்கள்!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால்வெற்றிகரமாக முறியடிக்கப்பட்ட இலங்கை இராணுவத்தின் முன்னேறிப்பாய்தல ராணுவ நடவடிக்கையை இரு மேஜர் ஜெனரல்களாலும் மூன்று பிரிகேடியர்களாலும் வழி நடத்தப்பட்டதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன

மேற்படி இராணுவ நடவடிக்கையை, வடக்கு-கிழக்குப் பிராந்திய முப்படை நடவடிக்கை தளபதியும் இராணுவத் தலைமை அதிகாரியுமான மேஜர் ஜெனரல் ரோகான்தளுவத்தை தலைமை வகித்து செயல்படுத்தினர். இவருடன் யாழ். பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியாவும் இணைந்து 15 ஆயிரம் படையினரின் நகர்வுகளை பலாலியிலும் பொன்னலையிலுமிருந்து நெறிப்படுத்தினர்கள்.

வான்தாக்குதலுக்கு விமானப்படை நடவடிக்கை இயக்குநர் ஜெயல வீரக்கொடி தலைமை தாங்கினர்.

பலாலி, மாதகல். காரைநகர் பகுதிகளிலிருந்து மூன்று பிரிவுகளாக வெளியேறிய இராணுவத்தினருக்கு மூன்று பிரிகேடியர்கள் வழிநடத்திச் சென்றார்கள்

மாதகலில் இருந்து முன்னேறிய இராணுவ அணிக்கு பிரிகேடியர் நிஹாலும், தெல்லிப்பழையிலிருந்து முன்னேறிய இராணுவ அணிக்கு பிரிகேடியர் ஆனந்தகொமகொடவும் பலாலியிலிருந்து முன்னேறிய இராணுவ அணிக்கு பிரிகேடியர் கே. வி. ஏகெடகொலவும் தலைமை வகித்துச் சென்றனர்.

இராணுவத்தினருக்கு உதவியாக 2அவ்ரோவிமானங்கள் ஒரு வை-8 ரக விமானம், ஆறு பீரங்கி பொருத்திய ஹெலிகொப்டர்கள், மூன்று புக்காரா விமானங்கள், இரு சுப்பசொனிக் விமானங்கள் ஆகியன ஈடுபடுத்தப்பட்டன.

இவற்றுடன். பெருமளவு டாங்கிகள், ரஷ்ய கவச வண்டிகள், கடற்படைதாக்குதல் கப்பல்கள் ஆகியனவும்ஈடுபடுத்தப்பட்டதாக கொழும்புச் செய்திகள் மேலும் தெரிவித்தன. வி-ரி

# வவுனியா முகாமிலிருந்து தொடர் ஷெல் தாக்குதல்

(வவுனியா)

வவுனியாவில் தொடர்ந்து பொதுமக்கள் குடியிருப்புக்களில் ஷெல்தாக்குதல்கள் நடைபெற்று வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மக்கள் குடியிருப்புக்களை நோக்கி கடந்த சில நாட்களாக வவுனியா இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இச்ஷெல் தாக்குதல்களினல் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி மேலதிக தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. -ரி

# திருமலை குண்டுதாக்குதலில் படையினரில் ஒருவர் பலி

(திருமலை)

திருமலையில்படையினர் மீது நடத்தப்பட்டகைக் குண்டுவீச்சில்படையினர் தரப்பில் ஒருவர்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் கைக் குண்டுவீச்சிலேயே இவர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்தாகவும். அரசு தெரிவிக்கிறது. -ரி

## பலதும் பத்தும்

### வதந்தியின் வேகம்!

வதந்தியின் வேகம் நாட்டுச் சூழலுக்கு ஏற்ப கூடிக் குறையும் என்கிறார்கள்... அதன் கேடுகளை அனுபவித்து அறிந்தவர்கள்.

தந்தி வசதியில்லாத இக் காலத்தில்... போரின் வெப்பம் அதிகரிக்கும் வேளையில்... வதந்தியின் வேகமும் எண்ணிக்கையும் திடீரென அதிகரிக்கும். இதனுல்... மக்கள் பரபரப்படைந்து... பதட்டமடைந்து... பல விஷயங்களைக் கற்பனைபண்ணிப் படும் பாடுதான் எவ்வளவு?

அத்தோடு... திட்டமிட்டு வதந்தி பரப்பி மக்களைக் குழப்பித் துன்புறுத்துவோர் சமூக விரோதிகள் மக்கள் விழிப்பாக இருந்து இத்தகை போரின் இன்னல்களிலிருந்து தம்மைத் தாம் காப்பாற்றிக்கொள்ள வேண்டுவது அவசியமல்லவா?

—மயூரன்

# உண்மை செய்திகளை அரசு வெளியிடவேண்டும்

(கொழும்பு)

வடக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் பற்றி அரசாங்கமும், இராணுவமும் உண்மையான செய்திகளை வெளியிடவேண்டும் என்று பத்திரிகையாளர்கள் அரசாங்கத்தை கேட்டுள்ளதாக பி.பி.ஸி. சிங்கள சேவை தெரிவித்தது.

புலிகளின் செய்திகள்மூலம் பல செய்திகள் தாம் அறிந்துள்ளதாகவும் இதன்உண்மை நிலைமைகளை அரசாங்கம்வெளியிடவேண்டும்" எனவும் அவர்கள் அரசைக் கேட்டுள்ளனர். ம-கி

# யாழ். பிரதம தபாலகம் வழமைபோல் இயங்குகிறது

[நல்லூர்]

யாழ். பிரதம தபாலகம் திங்கட்கிழமை முதல் வழமைபோல் இயங்கத் தொடங்கியுள்ளது. யாழ் பிரதம தபாலதிபரின் அழைப்பின்பேரில் தபால் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் வேலைக்கு சமூகம் கொடுத்துள்ளனர்.

தபால் விநியோக சேவையும் நடைபெற்றுவருகிறது. குடாநாட்டுத் தபாலகங்களுக்கான தபால் பொதிகளும் யாழ். பிரதம தபாலகத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்டது. 175-சி

# புலிகள் தாக்கி அழித்த புல்டோஸரை மக்கள்பார்வையிடுகின்றனர்

(யாழ்ப்பாணம்]

மாகியப்பிட்டியில் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட இராணுவத்தின் புல்டோசரை நேற்று ஏராளமான பொது மக்கள் பார்வையிட்டு சென்றனர்.

மக்களின் வீடுகள் மற்றும் கட்டிடங்களை தாக்கி அழிப்பதற்காக இந்த புல்டோசரை இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்டது.

இந்த புல்டோசரை விடுதலைப்புலிகள் தாக்கி சேதப்படுத்தியுள்ளனர். 170-ரி

# விடுதலைக்கு முந்திய நாட்கள்

புத்தபெருமானுக்கு காணிக்கையாக சிங்களத்தின் விகாரைகளிலே வைக்கப்படும் வெண்ணிற தாமரை மலர்கள் யாவும் இப்போது ஆறாக ஓடும் குருதியால் செந்நிறமாகின்றன. எம்மக்களை உயிரோடு வெட்டிச் சாய்க்கின்ற சிங்கள இராணுவத்திற்கு தெய்வ ஆசிர்வாதம் ஓதப்படும் பிரித்துக்கள் யாவும தமிழ் மக்கள் உச்சந்தலையிலே எறிகணையாக வீழ்ந்து வெடிக்கின்றது.

கொடும்போரை தமிழ் மக்கள் மேல் சிங்கள அரசு தொடுத்துள்ள நிலையிலும் அவ்வரசுக்கு ஆதரவைக்கொடுத்து வயிற்றைக் கழுவும் கொழும்பு தமிழ்க் குழுக்கள் வடிக்கும் நீலிக்கண்ணீர் கொதிக்கும் எரிமலைக் குழம்பாக எம்மக்கள் மேல் கொட்டப்படுகின்றன. போர்த் தேவதையாக மாறுகின்றார் சந்திரிகா அம்மையார். திமிராகப் பேசும் ரத்வத்தை யுத்த கோலம் கொள்கின்றார் பிக்குகள் துப்பாக்கிகள் ஏந்துகின்றனர். தமிழர் சடலங்கள் சிங்களத்தின் நீர்நிலைகளிலே மிதக்கின்றன. இவ்வாறாக சிங்கள இனமே போர்க்கோலம் பூண வைக்கப்படுகின்றது.

இறைவன் பாதத் தாமரையில் படவேண்டிய வெண்தாமரை மலர் தமிழர் குருதியை உறிஞ்சும் போரின் சின்னமாக சிங்களவர் கையிலே சந்திரிகா அம்மையாரால் திணிக்கப்படுகின்றன. பல இலட்சம் யூதரை அழித்த போதும் ஹிட்லரால் இவ்வாறுதான் கூறப்பட்டது. அமைதியைக் கொண்டுவர அம்மையார் போர்செய்வதாக கூறுவது போல ஜேர்மனியிலும் அமைதி நிலவுவதற்காக யூதர் அழிக்கப்பட்டதாக ஹிட்லரால் கூறப்பட்டது. ஊரை, உலகை ஏய்க்க உச்சக்கட்ட பிரச்சாரம் நிகழ்த்தப்படுகின்றது.

எதற்காக இந்தப்போர்? என்ன தவறினை அம்மக்கள் இழைத்தனர். தமிழ் மக்கள் இலகுவில் பயணம் செய்ய முந்தநாள் திறந்த பூநகரி தளத்தை மூடி பாதையை திறவுங்கள் எனப் பண்பாகக் கேட்டதற்கான பரிசா இது?

தந்தைக்கு மகள் தப்பாமல் பிறந்திருக்கின்றார். 1956ம் ஆண்டு யூன் மாதம் 5ம் திகதி 300 தமிழர்கள் காலிமுகத்திடலில் அமைதி வழியில் எதிர்ப்பை காட்டியதையே சகிக்கமுடியாமல் குண்டர்களை ஏவியவர் அல்லவா தந்தையார்? தமிழர்க்கு இவ்வளவு கொழுப்பா? பணியவைக்க இதுதான் வழியென 56ம் ஆண்டு இனக்கலரத்தை தொடக்கியவர் அல்லவா அவர்? 58ம் ஆண்டு இன ஒழிப்பின்போது போதுமான வன்முறைகள் தமிழர்மேல் பிரயோகிக்கப்படும்வரை பொறுத்திருந்து பார்த்து மகிழ்ந்த தந்தைக்கு மகளாகப் பிறந்தார். இன்னுமொருபடி மேலே போய்விட்டார். தந்தை வளர்த்த தீ தாயாரால் விசிறப்பட்டு மகளால் விளாசி எரிக்கப்படுகின்றது.

சிங்களத்திலே சிரிப்புக்கு இடமாகிவிட்ட தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்றாமையால் சூனியமாகிவிட்ட தனது எரிச்சலை அரசியலாக கட்டியெழுப்ப பட்டப்பகலிலேயே கொட்ட கொட்ட முழித்திருக்கும் சிங்களவரை மீளாத்துயிலில் ஆழ்த்தஇந்தப் போர் அம்மையாருக்கு தேவையாகிவிட்டது.

தமிழர்மீது முழு அளவிலே போரைத் தொடங்கி தமிழரை ஒழித்துக்கட்டி அவ்வொழிப்பின் ஆரவாரத் திமிரில மகிழ்ச்சிக் களிப்பிலே சிங்கள மக்களிடம் மீண்டும் தேர்தல் தாலாட்டுப்பாடி நித்திய கண்டத்திலே இன்றோ நாளையோ என்றிருக்கும் தனது ஆட்சிக்கு பெரும்பான்மை பலம் பெறும் திட்டம்தான் இப்போர் என்பது சிங்களத்தின் சிறுபிள்ளைகட்கும் இன்று தெரியும். இது குறித்து கண்டனத்தொனியில் தலையங்கமே எழுதியிருக்கும் சிங்களப் பேரினவாத ஊதுகுழல் 'சண்டே ஐலண்ட்', என்ன சொல்கிறது? இம் மாதிரியான அரசியல் நோக்கத்திற்காக தமிழர் மேல்போரி தொடுப்பதா? இது சுருட்டுக்கு நெருப்பு பற்றவைக்க அடுத்தவன் வீட்டுக் கூரையை தீமூட்டும் மனவிகாரம் அல்லவா என்கின்றது. அவ்வாறுதான் போரில் வெற்றி பெற்றாலும் 2ம் உலகப்போர் வெற்றியின் பின் வின்ஸ்ரன் சேர்ச்சிலும் வளைகுடாப் போரின் வெற்றியின் பின் ஜோர்ஜ் புஷ்ஷும் மண் கவ்வவில்லையா? என நியாய விசாரணை செய்கின்றது.

இன்றும் சிலரோ, தலையற்றமுண்டம் போல் தலைமையற்றிருக்கும் சிங்களத்திற்கு இராணுவ கடுங்கோட்பாளரும் சிங்களத் திமிரும் நிரம்பிய தானே பொருத்தமானவர் என்பதை நிருபிக்க அனுருத்த

**வே.பாலகுமாரன்**

ரத்வத்த போடும் ஆட்டம்தான் இதுவென்கின்றனர்.

இவ்வாறாக எவ்வாறான விளக்கம் கொடுபட்டாலும் எம் மக்களைப் பொறுத்தவரை ஒரு விடயம் இப்போது மிகத் தெளிவாகிவிட்டது. அதுதான் 'அந்த நாட்கள்' எம்மை அண்மிக்கின்றன என்பதுதான் என்ன. அந்த நாட்கள் என நீங்கள் கேட்கக் கூடும் அவைதான் விடுதலைக்கு முந்திய நாட்கள் விடுதலைக்காக சத்திக்கும் மீறிவிலையைத் கொடுக்கும் நாள் ஏற்கனவே விடுதலைபெற்றநாடுகள் கொடுத்த விலையை புள்ளி விபரப்படுத்தும் நாட்கள்.

''பாரதி அன்று பாடியது போல்:

'இதம்தரு மனையிலை நீங்கி
இடர்மிகுசிறைப்பட்டாலும்
பதம் திரு இரண்டும் மாறி
பழி மிகுந்து இழிவுற்றாலும்
விதம்தருகோடியின்னல்விளைந்
தென்னை அழித்திட்டாலும்
சுதந்திர தேவி நின்னை
தொழுதிடல் மறக்கிலேனே''

என அம் மக்கள் உறுதி பூணும் நாட்கள்தான் அவை. கோபம் கொப்பளிக்கும் மனத்தோடு உடல் விதிர்விதிர்க்க உயிர்க்குலை நடுங்க குருதிகளைய சொந்த மண்ணிலே அந்நியரால் அலைக்கப்படும் ஆற்றாமை எம்மக்களை பாதித்தாலும் அவர்கள் அடிமனம் ஆழ்மனம் கூறுவதும் கோருவதும் இதுதான், எரிமலை குமுறி திரள்வது போல் ஆறாக் கோபம் சிங்களத்தின் மேல் கொள்ளும். எம்மக்கள் விரும்புவதும் இதுதான்:

வள்ளுவர் வாய்மொழி போல அல்லல்பட்டு ஆறாக ஓடவிடப்படும் தமது கண்ணீர் சிங்களத்தை தேய்க்கும் கூரிய வாளாக மாற்றப்பட்டு விடுதலை வென்றெடுக்கப்பட வேண்டும்; தம்மேல் இழைக்கப்படும் கொடுமைகட்டு சிங்களம் பதில் சொல்ல வைக்கப்பட வேண்டும் என்பது தான்அது.

என்றோ ஒருநாள் நிகழ்த்தப்படும்என எதிர்பார்க்கப்பட்ட முழுஅளவிலான தனதுமுழுப் பலத்தையும்திரட்டிச் சிங்கள அரசு மேற்கொள்ளும் போர் இப்போது மூண்டிருக்கின்றது. இவ்வாறான போரொன்றிலே தான் வியட்னாமிலே மக்கள் இலட்சக்கணக்கில் கொல்லப்பட்டனர். அண்மையில் செச்சென்யாவில் குறோஸ்னி தலைநகரம் தரைமட்டமாக்கப்பட்டு 25ஆயிரம் மக்கள் இரையாக்கப்பட்டனர். இவ்வாறான இன ஒழிப்பின் போதுதான் றுவாண்டாவில் 7வாரத்தில் 7 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். ஆனல் இவையெல்லாம் வரலாற்றைமாற்றிவிடவில்லை. இவற்றின்பின்னே விடுதலை இங்கெல்லாம் உறுதியானது. காரணம் எத்தகைய இடர் வந்தபோதும் மக்கள் மனவுறுதி தளரவில்லை. மன உறுதி தளர்ந்த இடங்களிலே விடுதலை வேகம் குறைந்து வீழ்ச்சிகண்ட வரலாறும் உண்டு.

இன்றுவியட்நாம் நடந்ததை மறந்து அமெரிக்காவோடு சரிக்குச் சமமாக உறவு கொள்கின்றது. றுவாண்டாவிலே போராளிகள் ஆட்சியாளராகிவிட்டனர். செச்சென்யாவில் இழைத்த கொடுமைகளால் ரஷ்ய சமூகமே பிளவுபட்டு சனதிபதிஜெல்ட்சினுக்கு இரத்தக்கொதியேற்பட்டு மருத்துவமனையில் கிடக்கின்றார். அமெரிக்காவில் கொடுமைபுரிந்த இராணுவத்தினர் மனப்பிறழ்வு நோயான கழிவிரக்கம் கொண்ட மனநோயாளிகளாகிவிட்டனர். எனவே எம்மக்கள் உணர்ந்த செய்தியும்உணரவேண்டிய செய்தியும் வாயால் சொன்னசெய்தியும் இதுதான்:

''சென்றதினி மீளாது—நீர்
எப்போதும்
சென்றதையே சிந்தை
செய்து
கொன்றெழிக்கும் கவலை
யென்னும் குழியில் வீழ்ந்து
குலையாதீர் — சென்றதனை
குறித்தல் வேண்டா
இன்று புதிதாகப் பிறந்
தோம் என்று நீவிர்
எண்ணமதை திண்ணமுற
வாக்கினால்
தீமையெலம் அழிந்து
போகும் திரும்பி வராது.

என உறுதி பூண்டு எதிர்வரும் தடைகளை உடைத்தெறிவோம்.

ஆம்! ஊர்கூடித் தேர் இழுக்கும் நாள் வந்துவிட்டது எதிரியை விரட்டி மண்ணை மீட்டு அம்மண்ணை தக்கவைத்து பாதுகாத்து எமது வாழ்வை உறுதிப்படுத்தி நிலைப்படுத்தும் காலமிது எவ்விதமான மனக்கிலேசமுமின்றி ஐயமின்றி தமிழீழ விடுதலைப் புலிகள் படையணியில் அணியணியாக தமிழ் மக்கள் சேரும் காலமிது.

வாராது வந்துதித்த வரலாற்று நாயகன் வழிகாட்டலில் விடுதலையை வென்றெடுக்கும் வாய்ப்பு எமக்கு வாய்த்துள்ளது. வரலாற்றுத் தாய் உவந்தளித்த வாய்ப்பினை வழுவவிடாது கெட்டியாகப் பற்றிக்கொள்வோம்.

நன்றி:
புலிகளின் குரல்

---

உயர்தர பரீட்சை:

## அனுமதிஅட்டைகள்வந்தன காகிதாதிகள் இன்னுமில்லை

(திருநெல்வேலி)

க.பொ த சாதாரண தர பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் இதுவரை இங்கு வந்துசேரவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை க. பொ. த. உயர்தரப் பரீட்சை அனுமதி அட்டைகள் எடுத்து வரப்பட்டுள்ள போதும் பரீட்சைக்கு தேவையான காகிதாதிகள் வந்துசேரவில்லை.

எடுத்துவரப்பட்ட அனுமதி அட்டைகளை விநியோகிப்பதில் பல இடர்பாடுகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகள் முகாம்களாகவும், மாணவர் இடம்பெயர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி பரீட்சை இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

157-கி

## சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

விசர் நாயினால் கடியுண்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஆறு வயதுச்சிறுமி ஒருவர் கடந்த ஞாயிறு அங்கு மரணமானார்.

உரும்பிராய் கிழக்கைச் சேந்த சிங்கராசா தினேகா (வயது 6) என்ற சிறுமியே மரணமானவராவார்.

90-கி

அவசர

## முதலுதவிப்பிரிவு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிசென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு, போர்க்கால அவசரமுதலுதவிப்பணிகளை மேற்கொள்வதற்கு பணிமனையை உடுப்பிட்டி அ.மி.கல்லூரியில் திறந்துள்ளது.

இப்பணிமனையினூடாகஉலர் உணவுசேகரித்தல, பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடைகள் சேகரித்தல், அவசர தேவைகளுக்கான முதலுதவிப்பணிகள், வைத்தியசாலைப்பராமரிப்புஎன்பன மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிக்கு ஒத்துழைப்பையும், உதவிகளையும் வழங்குமாறு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் வடமராட்சிப்பிரதேச ஆணையாளர்கேட்டுள்ளார்.

-சி

அ. அ. தி. மு, க. அலுவலகம் மீது

## வெடிகுண்டுத் தாக்குதல்!

(சென்னை)

நாகை காயிதேமில்லமாவட்டத்தில்நேற்றுமுன்தினம்இரவு அ. அ. தி. மு. க. அலுவலகத்தின் மீது வெடிகுண்டுகள் வீசப்பட்டதில் அங்கிருந்த நால்வர் காயமடைந்தனர்.

வெடிகுண்டு வீச்சு நடைபெற்ற பொழுது மின்சாரம் தடைப்பட்டதாகவும் குண்டு வீசியவர்கள் இருட்டில்தப்பிச் சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் இந்த மாதம் நடைபெற்றுள்ள ஐந்தாவது குண்டுவீச்சு சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

-ரி

## குரும்பசிட்டி கனகரத்தினம் கண்டியில் கைது

(கண்டி)

குரும்பசிட்டி கனகரத்தினம் கண்டியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டியில் பத்திரிகை துணுக்குகள் மற்றும் கலைக்களஞ்சியம் அடங்கிய நூல் கண்காட்சியை ஒன்றை நடத்துவதற்காக இவர் அண்மையில் கண்டிக்குச் சென்றார்.

தமிழர் போராட்டம் பற்றிய அரசியல் செய்திகள் மற்றும் தகவல்களை பத்திரிகைகளிலிருந்து தொகுத்து வைத்துள்ள இவர் உலகெங்கும் வாழும் தமிழர்கள் மற்றும் தமிழ் நிறுவனங்களுடன் நெருங்கிய, தொடர்புள்ளவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது கைது தொடர்பாக மேலதிக விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ரி

## ஐ. நா. படையை வெளியேறுமாறு பொஸ்னிய அரசு கோரிக்கை

(லண்டன்)

பொஸ்னியாவில் உள்ள ஐ. நா. படைகளை வெளியேறுமாறு பொஸ்னிய அரசு அறிவித்துள்ளது.

பொஸ்னிய சேர்பியர்கள் நடத்திவரும் தாக்குதல்களால் பொஸ்னிய மக்கள் பெருமளவில் அகதிகளாக வெளியேறிச் செல்கின்றனர். இந்த அகதிகள் தொடர்பான ஐ. நா.வின் நடவடிக்கைகள் குறித்து பொஸ்னிய முஸ்லிம் அரசு கண்டனம் தெரிவித்திருந்தது. இதை அடுத்தே பொஸ்னியா, ஐ. நா. படைகள் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் பொஸ்னிய நகரான ஷ்ரெபனிற்ஸா பொஸ்னிய சேர்பியர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகி அவர்கள்வசம் வீழ்ச்சியுற்றது. இதனை அடுத்து அந்நகரில் வசித்த ஆயிரக்கணக்கான பொஸ்னியர்கள் நிர்க்கதியாகி அகதிகளாக வெளியேற்றப்பட்டனர். இவர்களது பாதுகாப்புக்கு ஐ. நா.வே பொறுப்பேற்கவேண்டுமென பொஸ்னிய அரசு முன்னர் கூறிவந்த போதும் இந்த அகதிகளின் நிலை இப்போது கேள்விக் குறியாகிவருகின்றது.

(தீ-சி)

## ஷெல் தாக்குதலில் கோவில் பலத்தசேதம்

(வட்டுக்கோட்டை)

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் கோவில் ஷெல் தாக்குதலால் சேதமடைந்துள்ளது.

இராணுவத்தினர் சங்கானைப்பகுதிக்குள் நுழையும் போது பலாலி, மாதகல்ப்பகுதிகளிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களே இக்கோவிலைச்சேதப்படுத்தியுள்ளன.

இதேபோன்று வட்டுக்கோட்டை, அராலி, மூளாய், சித்தங்கேணிப் பகுதியிலும் ஷெல் மற்றும் விமானத்தாக்தலினால் பல கோவில்கள் பலத்த சேதமடைந்துள்ளன.

139-சி

## 1995/96 ஆண்டுக்கென

# இலங்கைப் பல்கலைக்கழகங்களில் 9,000 மாணவர்கள் சேர்க்கப்படுவர்

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் 1995/96-ப் கல்வி ஆண்டுக்கென சுமார் ஒன்பதாயிரம் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கிறார்கள்.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற க. பொ. த. உயர் தரபரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியான மாணவர்களிடமிருந்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு விண்ணப்பங்களை கோர இருக்கிறது அடுத்த மாதம் முதல் வாரததில் இருந்து விண்ணப்ப பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்

பல்கலைக்கழக மானிய ஆக்குணைழுவின் பிரசுரங்களை விற்பனை செய்வதற்கென மாவட்டங்கள் தோறும் புத்தக களஞ்சியங்களை ஆணைக்குழு அமைத்திருப்பதால் இந்த வருடம் தொடக்கம் விண்ணப்ப பத்திரங்களை இந்தக்களஞ்சியங்களில் இருந்தே பெற்று கொள்ளலாம் என்று ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் பரீட்சையில் சுமார் ஐம்பதினுயிரம் மாணவர்கள் சராசரி சித்திப் புள்ளிகளான 180 புள்ளிகளைப்பெற்றுள்ளார்கள் என்று இந்த அதிகாரி மேலும் கூறினார். -ரி

# "பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்னையை தீர்க்க நடவடிக்கைஎடுக்கவேண்டும்"

## இந்துசமயப் பேரவை ஜனதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்]

அழிவுக்கு வழி கோலியுள்ள இராணுவ நடவடிக்கையை உடன் நிறுத்தி பேச்சு வார்த்தை மூலம் இனப்பிரச்னையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை கடந்த வாரம் வலிகாமத்தில் நடத்தப்பட்ட ராணுவ நடவடிக்கையை கண்டித்து ஜனதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் வெளிநாட்டுத் தூதரகங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், எதிர்க்கட்சி தலைவர் யாழ். அரச அதிபர் போன்றோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இத்தாக்குதல்கல் காரணமாக இதுவரை 250ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் குழந்தைகள், பெண்கள் உட்படக் கொல்லப்பட்டுள்ளனர். ஏராளமான குடிமனைகள் நாசமாக்கப்பட்டுள்ளன. இந்தக்கோயில்கள் தேவாலயங்கள் ஆகியன அழிக்கப்பட்டுள்ளன.

நவாலி சென் பீற்றேர்ஸ் தேவாலயத்தில் தஞ்சம் அடைந்திருந்த பொதுமக்கள் மீது ஈவிரக்கம் அற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதல்களால் 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் உட்படபலர் கொல்லப்பட்டுள்ளனர். இப்படு கொலைத் தாக்குதல்களை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இச்சம்பவம் பற்றி உண்மைக்குப் புறம்பான தகவல்களை அரசாங்கம் வெளியிட்டுள்ளதால் இது பற்றி உடன் விசாரணை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் பொதுமகக்கள் தஞ்சம் அடைந்துள்ள வணக்கத்தலங்கள் மீதும் பாடசாலைகள் மருத்துவமனைகள், அகதி முகாம்கள் ஆகியவற்றின் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளுவதை நிறுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கொல்லப்பட்டவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும், உடைமைகளை இழந்தவர்களுக்கும் உடனடி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம். அழிக்கப்பட்ட இந்து கோவில்களையும் தேவாலயங்களையும் புனரமைக்கவும் ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

- ரி

## சித்தத்தில் வீரம் வை

பக்கத்தி லேதம்பி
படுகாயப் பட்டுவிட்டான்
ரத்தத்துக் காயாலேதி
தேடுகிறர்
வெட்கத்தில்—
சத்தத்தைக் கேட்டழுது
சாகாதே நீயெழுந்து
முற்றத்தைப் பார்
முறுக்கு மீசை!
ரத்தம்கொடு காயம்
பட்டவரை யாதரிப்பாய்
சத்தம் கலக்குதென்று
சாகாதே
யுத்தமடா—
பத்தல்ல ஒருயிரே
பலதடவை சாகாமல்
சித்தத்தில் வீரம்வை
சிறந்து!

— நிம்மதி.

★

## வீரரைப் பாடுவோம் வாரீர்.

சிறிய வேங்கைகள் வெங்களம் நுழைந்தன
சிங்களம் திகைத்தது பாரீர்
மீறியே யெல்லையைத் தாண்டியே வந்தவர்
வீழ்ந்தன ரழிந்தனர் பாரீர்

ஆலய மீதினில் குண்டுகள் பொழிந்தவர்
அந்தரத் தழிந்தனர் பாரீர்
ஞால மதிர்ந்திடக் கொடுமைகள் புரிந்தவர்
விதைத்ததை அறுத்தனர் பாரீர்

குருதிக் குளத்தினில் மாண்டவ ராவியில்
வெந்திடும் பகையினைப் பாரீர்
செருக்கள மதிர்ந்திட படையினை மடக்கிய
வீரரைப் பாடுவோம் வாரீர்

அறத்தினைக் கொன்றிடு மரசும் வீழ்ந்திடும்
அவலமும் மறைந்திடும் பாரீர்
மறவரின் வேள்வியில் ஈழமும் மலருது
மகிழ்ந்திசை பாடுவோம் வாரீர்.

— "மாரீசன்"

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995 – 07 - 20

வியாழன் இரவு

8-02 சொல்லுங்கள் பார்க்கலாம்
8-10 சித்த மருத்துவக் குறிப்புகள்
8-20 உழைப்போம் உயர்வோம்—"உணவைப்பதனிடுவோம்" சித்திரம்
8-30 செய்திகள்
8 40 மொழியும் வாழ்வும்
8-50 எங்களின் தேசம்
9-00 ஒலிபரப்பு நிறைவு

1995–07–21

வெள்ளி காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 மணியாரம்
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 தாயகப் பாடல்கள்
8-00 ஒலிபரப்பு நிறைவு

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–07–20

வியாழன் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சி கீதம்
5-10 புதியவை
5-15 மழலைகளுக்காக
5-30 இசையும் கதையும்
6-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
6-02 பொன்விளையும் பூமி
6-10 செய்திகள்
6-15 உணர்வின் ராகங்கள்
6-30 ஒலிபரப்பு நிறைவு

### விடுதலைப் புலிகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கம் உலக நாடுகளுக்கு தெரிவித்ததையடுத்தே பௌத்த உயர்பீடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

மேற்படி சம்பவம் குறித்து இலங்கைஅரசு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மீது கடும் சீற்றமடைந்துள்ளதும் தெரிந்ததே. -வி-சி

### 2ம் கட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரி கூறியுள்ளார்.

காரைநகர், பலாலி இராணுவ முகாம்கள் ஊடாக இந்த படை நடவடிக்கைக்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கொழும்பிலிருந்து போர்த்தளபாடங்கள் பலாலி இராணுவ முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

தரை மூலமும், கடல்மூலமும், வான் மூலமும் யாழ்ப்பாணத்தை தாக்குவதற்கு படையினர் ஆயத்த நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தார். ம சி

### மட்டுநகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது மூடப்படவுள்ளன.

மட்டக்களப்பு விமான நிலைய ஆயித்தியமலை வீதியில் உள்ள அரசடிச்சேனை, ஆயித்தியமலை இராணுவ முகாம்கள் மூடப்பட்டுவிட்டன. இதன் மூலம் மட்டக்களப்பு வாவியின் மேற்கு புறமுள்ள உன்னிச்சை, ரூபம நீர்ப்பாசனத் திட்டப் பிரதேசங்கள் பூரணமாக விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் வந்துள்ளன.

ஏற்கனவே வாகரைப் பிரதேசத்திலுள்ள கோறளைப் பற்று வடக்கு பிரதேச செயலர் பிரிவு பூரணமாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டன. விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல் காரணமாக மேலும் பல முகாம்களை மூடுவதற்கு இராணுவம் ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

மட்டக்களப்பு மண்முனை மேற்கில் வவுணதீவு இராணுவ முகாம் மட்டுமே தற்போது உள்ளது. -ம-சி

### அதிபர்கள் கூட்டம்

(உடுவில்)

உடுவில் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் இன்று 20 ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக் மருதனர்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அதிபர்கள் பாடசாலைகள் ஆசிரியர்கள், மாணவர்களுக்கேற்பட்ட சேதங்கள், உயிரிழப்பு விபரங்களை திரட்டிக் கொண்டுவருமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர். எஸ். இரத்தினராசா கேட்டுள்ளார். 109-கி

### முன்னேறிப்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இவை சூறையாடப்பட்டு ஏற்றிச் செல்லப்பட்டதாக அப்பகுதிகளில வெளியேறமுடியாது தங்கியிருந்த மக்கள் தெரிவித்தனர்.

இப்பகுதிகளில் இராணுவத்தினரின் டாங்கிகள், மற்றும் கனரக வாகனங்களினல் மக்கள் குடியிருப்புக்கள், பலத்த சேதத்திற் குள்ளாக்கப்பட்டுள்ளன.

மதில்கள், வீடுகள், வேலிகள் யாவும் இவற்றுல் இடித்துத் தள்ளப்பட்டுள்ளன. வேலிகள் யாவும் வெட்டி வீசப்பட்டுள்ளன. (170-90-ரி)

### அதிபர்களுக்கான சந்திப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்டங்களின் பாடசாலைகளை மீளத்திறப்பது சம்பந்தமாக அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை மு. ப. 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் சகல அதிபர்களையும் தவருது வருகை தரும்வண்ணம் கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளனர். -சி

### ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கி தற்போது மானிப்பாயிலிருந்து இடம்பெயர்ந்து இணுவிலில் காங்கேசன்துறை வீதியில் 4ம் கட்டையில் இயங்குகின்றது. இங்கு இன்று வியாழன் முதல் ஒய்வூதியம் வழங்கப்படும். -சி

### முன்னள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு ஐ. தே. க. எம். பிக்களும் ஆதரவு தெரிவித்து கூச்சலிட்டதால் சபையில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது.

சபையில் ஏற்பட்ட இந்த அமளி துமளியையடுத்து சபை 15 நிமிடநேரம் ஒத்திவைக்கப்பட்டது. சி

### கொழும்பு மேயர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பிரிவே கொழும்பு பதில் மேயரை கொலைத் திட்டமிட்டிருப்பதாகவும் புலனாய்வுத்துறையினர் தெரிவித்தனர்.

இதையடுத்து கொழும்பில் முக்கியஸ்தர்கள் பலரது பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

### ஹங்கேரியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வருமாறு:- லியேன் செபமாலை, கனகேஸ்வரன், சத்தியபாலி விக்டர் ஞானசீலன், செல்லையா விக்கினேஸ்வரன், சாஸ்திரிக்குமார், செல்லையா செல்வரட்ணம்' மகேஸ்வரன் தெய்வேந்திரன், சரவணமுத்து சுப்பிரமணியம், ரட்ணம்ராஜா, செல்வரட்ணம் கமலதாசன் மற்றும் ஆறு சிங்களவர்களும் உயிர் தப்பியுள்ளார்கள். உயிர் தப்பியவர்களில் இருவரின் பெயர்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

மேலதிக விபரங்களைப் பெற விரும்பும் உறவினர் கொழும்பிலுள்ள வெளி விவகார அமைச்சுடன் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி இலக்கங்கள்:- 330651, 437635. (வி-சி)

### மேலதிக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ந்து வருவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

'முன்னேற்ற பாய்ச்சல்' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட 15,000க்கும் மேற்பட்ட துருப்புக்களை விட மேலும் பெருமளவு துருப்புக்களை அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்த பாதுகாப்பு அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை யாழ். குடாநாட்டில் பரவலாக பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் படையினர் திட்டமிட்டுள்ளனராம். -சி


## முக்கிய அறிவித்தல்

ரோஸ் இனிப்புத் தொழிற்சாலை, மானிப்பாயில் பணியாற்றும் சகல நிரந்தர, தற்காலிக பணியாளர்களும் 21-07-95 வெள்ளிக்கிழமை காலை 09-00 மணிக்கு தொழிற்சாலையில் தவருது சமூகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகம்.

ரோஸ் இனிப்புத் தொழிற்சாலை,
மானிப்பாய். [ஏ-5117]

# அப்பாவி மக்களை தாக்காதீர் வெளிநாட்டு தூதர்கள் வற்புறுத்து

[கொழும்பு]

யாழ். குடாவில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையில் அப்பாவிப் பொதுமக்கள்மீது தாக்குதல்களை நடாத்த வேண்டாமென இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதர்களும், ராஜதந்திரிகளும் இலங்கை அரசை வற்புறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மீதான 'முன்னேற பாய்ச்சல்' இராணுவ நடவடிக்கையில் ஷெல் மற்றும் விமானத் தாக்குதலில் 200 அப்பாவித் தமிழர்கள் வரை கொல்லப்பட்டதாக தமக்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிப்பதாகக் கூறிய வெளிநாட்டுத் தூதர்கள் அப்பாவி மக்கள்மீது தாக்குதல் நடாத்துவதை உடன் நிறுத்துமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க, இந்த இராணுவ நடவடிக்கையில் பொதுமக்கள் எவராவது பாதிக்கப்பட்டிருந்தால் அதற்காக நாம் வருந்துகிறோம். இனி இவ்வாறான பாதிப்புக்கள் ஏறபடாத வண்ணம் முனனெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். சி

# வீரகாவியம் படைத்த மாவீரருக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை கடலில் கட்டளைக் கப்பலைத் தகர்த்து வீரகாவியம் படைத்த மாவீரர்களுக்கு யாழ் குடாநாடு முழுவதும் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த மாவீரர்களின் திருவுருவப் படங்கள் நேற்று பிற்பகல் 3-00 மணியளவில் குருநகர் சனசமூகநிலையத்தில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

கடற்கரும்புலி மேஜர் நியூட்டன், கடற்கரும்புலி மேஜர் தங்கன், கடற்புலி கப்டன் நாயகி, கடற்புலி கப்டன் கமலம், கடற்புலி லெப். நவமலர், கடற்புலி லெப் யாழரசி, கடற்புலி 2ஆம் லெப் மைவிழி, கடற்புலி கப்டன் வில்லவன் ஆகியமாவீரர்களின் திருவுருவப் படங்களே மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பெருமளவு மக்கள் இந்த மாவீரர்களுக்கு மலர்தூவி தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்கள்.

இம் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும்முகமாக குடாநாட்டின் பல பகுதிகளிலும் சிவப்பு, மஞ்சள் நிற கொடிகள் கட்டப்பட்டதோடு, வாழைகள், தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. சோக கீதங்களும் இசைக்கப்பட்டது.

வீரமரணமடைந்த மாவீரர்களின் திருவுருவப் படங்கள் இராணுவ மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் நாட்டப்பட்டது. 170-95-சி

## வரி செலுத்துவோருக்கு சிறப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டங்களை நடத்துவதற்கு வருவாய்ப்பகுதி ஏற்பாடுகள் செய்துள்ளது. கீழ் காணும் விபரப்படி நடைபெறவுள்ள இச் சிறப்புக் கூட்டங்களுக்கு அவ்வப் பகுதிகளைச் சேர்ந்த வரிக்குட்பட்ட வாணிப உரிமையாளர்களை தத்தமது வரி ஆவணத்துடன் குறித்த நேரத்திற்கு தவறாது வருகை தருமாறு தமிழீழ்விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் கேட்டுள்ளனர்.

**வலிகாமம்**

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் உ. அ. அ. பிரிவுகள் 23ம் திகதி (ஞாயிறு) மு. ப. 10-30 மணிக்கு குமாரசாமி மண்டபம், யாழ் இந்துக் கல்லூரி.

**தென்மராட்சி**

தென்மராட்சி பச்சிலைப்பள்ளி உ. அ. அ. பிரிவுகள் 23ம் திகதி (ஞாயிறு) பி ப 3-00 மணிக்கு டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி.

**வடமராட்சி**

கரவெட்டி, பருத்தித்துறை வடமராட்சி கிழக்கு உ. அ. அ. பிரிவுகள் 24ம் திகதி திங்கள்) பி ப 3-00 மணிக்கு மத்திய கல்லூரி நெல்லியடி. (வி-சி)

## 1950 மெ.தொ. மாவுடன் ஹபரண வருகிறது

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் இருந்து 1950 மெற்றிக் தொன் கோதுமை மாவை ஏற்றிக்கொண்டு 'ஹபரண' கப்பல் நாளை வெள்ளிக்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் தற்போது மா ஏற்றும் வேலைகள் நடைபெற்று வருகிறது.

இதேவேளை உணவுப்பொருட்களை ஏற்றி வந்த 'லங்கா முடித்த' கப்பல் காங்கேசன் துறைக் கடற் பகுதியிலே தரித்து நிற்கிறது.

தற்போது பருத்தித்துறை துறைமுகத்தில் ''மாகோ''விலிருந்து பொருட்கள் இறக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

இப்பணிகள் முடிவடைந்த பின்பே 'லங்கா முடித்தா' பருத்தித்துறைக்கு வரும். -170-சி

களுத்துறை சம்பவம்

## பொலிஸ் அதிகாரி வேலை நீக்கப்பட்டார்

(கொழும்பு)

களுத்துறையில் மேற்கொள்ளப்பட்ட துபாக்கிப்பிரயோகத்துக்குக்காரணமாக இருந்த களுத்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை வேலை நீக்கி அவர்மீது நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட ஏனைய பொலிஸ் அதிகாரிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்குமாறும் அவர் பணித்துள்ளார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

பொலிசார் மேற்கொண்ட இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்டதும் மேலும் பலர் காயமடைந்ததும் தெரிந்ததே. கி-சி

## ஒய்வூதியக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஒய்வூதியர்களுக்கான ஜூலை 95 வவுச்சர்களும், காசோலைகளும் நேரடியாக அந்தந்த வங்கிகளுக்கு இன்றைய சூழ்நிலை காரணமாக யாழ் செயலகத்தினால் அனுப்பப்பட்டுள்ளது.

சகல ஓய்வூதியர்களும் தங்களது அடையாளஅட்டை அல்லது தேசிய அடையாள அட்டையுடன் தமது ஓய்வூதியம் பெறும் வங்கிகளுக்குச் சென்று ஜூலை மாத கொடுப்பனவை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். -சி

யாழ்ப்பாணம்

## பல்கலை. விரிவுரை பற்றி 25ம் திகதி முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களுக்குமான விரிவுரைகள் மீண்டும் ஆரம்பிப்பதுபற்றி எதிர்வரும் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும். பல்கலைக்கழக பேரவை கூட்டத்திலேயே முடிவு செய்யப்படும் என்று பதிவாளர் திரு பரமேஸ்வரன் நேற்று தெரிவித்தார்.

இதைவிட பல்கலைக்கழகத்தின் சகல உத்தியோகஸ்தர்களையும் உடனடியாக கடமைக்கு திரும்புமாறும் பதிவாளர் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 29ம் திகதி பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த பட்டமளிப்பு விழாவும் பிற்போடப்பட்டுள்ளதாகவும் பதிவாளர் தெரிவித்தார். 170-சி

## புதைக்கப்பட்ட நிலையில் இளம்பெண்ணின் சடலம்

[சாவகச்சேரி]

நிர்வாணமாக அரைகுறையாகப் புதைக்கப்பட்ட நிலையில் இளம் யுவதியின் சடலமொன்று சண்டிலிப்பாய் பகுதியிலிருந்து மீட்கப்பட்டது.

இராணுவத்தினர் முன்னேறி வந்து பின்னர் துரத்தியடிக்கப்பட்ட பகுதியில் வீட்டு வளவொன்றிலேயே நேற்று இச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

கால்கள் வெளியில் தெரிந்த நிலையில் அரையும் குறையுமாக நிர்வாண நிலையில் இந்த யுவதியின் சடலம் தலைகீழாக புதைக்கப்பட்டிருந்ததை அப்பகுதிக்கு சென்ற பொதுமக்கள் நேற்று கண்டுபிடித்து பின் தகனம் செய்தனர். 155-சி

சங்கானை சண்டிலிப்பாயில்

## அழுகிய நிலையில் 5 சடலங்கள் எரிப்பு

(யாழ்ப்பாணம்)

சங்கானை, சண்டிலிப்பாய் பகுதியிலிருந்து நேற்றும் ஐந்து பொதுமக்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டு தகனம் செய்யப்பட்டுள்ளது.

சங்கானையிலுள்ள ஆலை ஒன்றுக்கு அருகில் வீட்டு வளவில் உள்ள கிடங்கில் இருந்து இரு சடலங்களும் சண்டிலிப்பாய் மணிமேகலை.ச நிலையத்திற்கு அருகிலுள்ள வீட்டு வளவிலிருந்து மூன்று ஆண்களின் சடலங்களும் அழுகிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டன.

சடலங்கள் யாவும் அடையாளம் காணமுடியாது உருக்குலைந்த நிலையில் இருந்ததை தொடர்ந்து நேற்று இவை பொதுமக்களால் தீ மூட்டி எரிக்கப்பட்டன. 170-71-சி

## ஈ. பி. டி. பி. எம். பிக்கள் நாடாளுமன்ற பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு சமாதான ரீதியான இணக்கத்தீர்வொன்றைக் காண்பது பற்றி ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்து திட்டவட்டமான உறுதிமொழி கிடைக்கும்வரை நாடாளுமன்றை பகிஷ்கரிக்கப் போவதாக ஈ.பி.டி.பி எம். பிக்கள் முடிவுசெய்துள்ளனர்.

இதேவேளை யாழ் குடாவில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் எதிர்வரும் 31ம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த. உயர்தர பரீட்சை உட்பட அனைத்து பரீட்சைகளையும் பிற்போடுமாறு ஈ. பி. டி. பி. ஜனாதிபதி சந்திரிகாவை கேட்டுள்ளது. சி

**பி. பி. ஸி'க்கு**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னிப்பு கோரவேண்டுமெனவும் இலங்கை வெளியுறவு அமைச்சகம் லண்டனிலுள்ள பி.பி.சி. தலைமையகத்திற்கு அறிவித்துள்ளது.

இது குறித்து லண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் திரு. எஸ். கே. விக்கிரமசிங்க பி. பி. சி, இயக்குநர் ஒருவரை அழைத்து இலங்கை அரசின் எதிர்ப்பை தெரிவித்துள்ளதுடன், இதற்காக பி. ப. சி. பகிரங்கமாக மன்னிப்பு கோரவேண்டுமெனவும் வற்புறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிது. -சி

## மோட்டார் ஊர்தி உரிமையாளர் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்]

மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் எதிர்வரும் 24ம் திகதி திங்கள் தொடக்கம் தங்களது ஊர்திகளைப் பதிவு மேற்கொள்ள வரும்போதும், உரிமைமாற்றம் செய்யவரும் போதும் தங்களது பிரிவு கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடவுச்சீட்டு அளவிலான இரண்டு புகைப்படம் எடுத்து வருதல் வேண்டும் என மோட்டார் ஊர்திப் பகுதியினர் ஊர்தி உரிமையாளர்களின் கவனத்திற்கு அறியத் தருகின்றனர். .சி

## நிர்வாக சேவை பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நேற்று கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சையை எதிர்வரும் 22ம் திகதி சனிக்கிழமை நடாத்துவதற்கு முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கி சி

## பலாலி படையினர் கடும் ஷெல் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

பலாலி இராணுவமுகாமில் இருந்து நேற்று இரவு 8 மணிக்கு சுன்னாகம், மருதனார் மடம், உடுவில் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதிகளுக்கு மீண்டும் குடியமரச் சென்ற மக்கள் அடுத்த தடவையாக வெளியேறிய அயற்கிராமங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தின்போது அவசரமாக சைக்கிளில் சென்றவர்கள் இருட்டில் மோதுண்டு விழுந்ததில் ஒரு பெண் தலையில் படுகாயமடைந்தார்.

உடுவிலைச் சேர்ந்த செல்வநாயகம் சந்திரகலோசனா (29 வயது) என்பவரே படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (90-சி)

**தமிழர்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் செல்வாக்கு அதிகரித்து வருவதையடுத்து தற்போது அ. தி. மு. க வும், தி. மு. க. வும் ஈழத்தமிழருக்கு ஆதரவாக பேரணிகளை நடாத்தத் தொடங்கியுள்ளன.

அண்மைக் காலமாக ஈழத் தமிழர் போராட்டத்திற்கு விரோதமாக செயற்பட்டுவந்ததாக கூறப்படும் தி. மு. க. அ. தி. மு. க போன்ற முக்கிய கட்சிகளும் ஈழத் தமிழருக்கு ஆதரவாக போராட்டங்களையும், பேரணிகளையும், உண்ணாவிரதங்களையும நடாத்தத் திட்டமிட்டுள்ளன.

சட்டசபைத் தேர்தலுக்காகவே இக்கட்சிகள் இவ்வாறு ஈழத்தமிழரின் பால் கரிசனை காட்டுவதாகவும் குறிப்பிட்டது. -சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்[ ... ] யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, [ ... ] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683612.